**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. C.C. No. 73 /2025**

**Deposition of Witness for Complainant PW8 (LW11)**

| | | |
|---|---|---|
| **Name** | : | கோமதி |
| **Father's Name** | : | சுப்பிரமணியம் |
| **Village** | : | கோவை |
| **Taluk** | : | கோவை |
| **Calling** | : | தலைமை காவலர் |
| **Age** | : | 49 |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**10.08.2026** **Witness Signature :**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு அனுமதிக்கப்பட்டது. இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 11.45 A.M**

1. நான் தற்போது கோத்தகிரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.04.2025ம் தேதி கோத்தகிரி அரசு மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட இண்டிமேசனின் பேரில் கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சத்தியமங்கலம் தாலுக்கா அண்ணா நகரை சேர்ந்த பழனிச்சாமி மகன் அருண் என்பவர் சுயநினைவின்றி அவசர பிரிவில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததால் அவரின் வாக்குமூலம் பெறமுடியவில்லை.

2. மேற்படி விபத்து சம்மந்தமாக காயம்பட்ட அருணின் அப்பா பழனிச்சாமி என்பவரை விசாரிக்க 13ம் தேதி அவரது மகனான அருண், அவரது நண்பர் இளங்கோவன் என்பவருடன் சத்தியமங்கலத்தில் இருந்து ஊட்டிக்கு சுற்றி பார்க்க இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக வந்தபோது, ஹாஸ்டிக் மாரியம்மன் கோவில் அருகில் ஸ்கிட் ஆகி விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி வாகனத்தில் அருண் பின்னால் உட்கார்ந்துகொண்டு சென்றதால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், கோத்தகிரி அரசு மருத்துவமனையில் முதலுதவி பெற்று கோவை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக வந்ததாக கூறியவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் கோத்தகிரி காவல் நிலைய குற்ற எண். 58/2025, ச.பி. 281, 125(a) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. புகார் வாக்குமூலம் கொடுத்த அருணின் அப்பா சம்பவத்தை நேரில் பார்த்தாரா என்றால் பார்க்கவில்லை, கேள்விப்பட்டுதான் புகார் வாக்குமூலம் கொடுத்தார். எதிரி இளங்கோவனுடன் வேறொரு இருசக்கர வாகனத்தில் வந்த நண்பர்களை விசாரித்தேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. உதவி ஆய்வாளர் விசாரித்தார். எதிரி அதிவேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டினார் என்று பொய்யாக கொடுக்கப்பட்ட புகார்

வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 10.08.2026**
**Judicial Magistrate,**
**Kotagiri**